திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, ஒரு விளக்கம் வேண்டும். இந்த குத்தகை பதிவேட்டு அதிகாரியிடம் போய்ச் சொன்னால், பக்கத்தில் உள்ள விவசாயி சாட்சி சொன்னால் கூட, குத்தகைதாரர் பதிவேட்டில் எழுதிக் கொள்வார்கள் என்று சொன்னார்கள். கடந்த ஆண்டு திருநெல்வேலியில் ஆதரைஸ்டு ஆபீசர் முன்னாலே நானே வழக்கு நடத்தினேன். அங்கே பிரச்னையெல்லாம் யார் நிலத்தை பயிர் பண்ணுகிறார்கள் என்பதுதான். தீர்ப்பு என்னவென்றால், நிலச் சொந்தக்காரர் சொந்த பயிர் வைத்திருக்கிறார்கள், குத்தகைதாரர் பெயர் பட்டியலில் இல்லை என்று சொல்லப்பட்டது. அப்படி தீர்ப்பு அளித்ததற்குப் பின்னால் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் போய் குத்தகைதாரர் தான் தான் பயிர் செய்வதாக சொன்ன பின்னாலும்கூட கடந்த 6 மாதமாகியும் அதற்கு முடிவு இன்னும் சொல்லவில்லை. அதிகாரிகள் இதை எழுதாமல் இருக்கிறார்கள். அரசில் உள்ளவர்கள் தலையீடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பரந்து கிடக்கிற தமிழ் நாட்டில் ஏதோ ஒரு சிறு கிராமத்தில் இப்படி நடந்திருக்கக் கூடும். அவர் என்ன நடந்தது என்று தெரிவிப்பார்களானால் அதைப் பற்றி விசாரிக்கலாம். எங்கோ ஒரு கிராமத்தில் குத்தகைதாரர் பெயரை எழுதவில்லை என்கிறார்கள். அப்படிப்பட்ட விவரத்தை அங்கத்தினர் அவர்கள் எழுதி அனுப்பினால் விசாரிக்கிறேன்.

7. அறிவிப்பு

பேரவை அலுவல் குறித்து

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI): I have to make an announcement to the House.

The Business Advisory Committee which met today has re-arranged the business of the House as follows—

3–4–1973 (Tuesday)—The Tamil Nadu Cultivating Tenants (Right to purchase the Landowners' Rights) Bill, 1973.

The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1973.

4–4–1973 (Wednesday)—**Holiday.**

5-4-1973 (Thursday)—From 11.00 a.m. to 11-30 a.m.

(1) The Tamil Nadu Legal Aid and Advice Bill, 1973.

(2) The Madras City Tenants' Protection (Amendment) Bill, 1973.

(3) The Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973.

Between 11-30 a.m. and 1-30 p.m.

(4) The Tamil Nadu Public Men (Criminal Misconduct) Bill, 1973.

After-noon—From 4 p.m. to 7 p.m.

(1) Half-an-hour discussion.

(2) Private Members' business.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73)

திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த உழவு தாரருக்கு நிலம் சொந்தமாக்கும் விஷயம் புரட்சிகரமான திட்டம்.

காந்திஜி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்த நாட்டினுடைய கிராமங்களுடைய முன்னேற்றத்தைப் பொறுத்துள்ளது. ஒன்பது லட்சம் கிராமங்கள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். வறண்டு கிடந்த பயிர்களைக் கொண்ட பூமி வானத்தை நோக்கிக் கொண்டிருப்பது போல, நல்ல காலம் வாராதா என்று ஏங்கிக் கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு, வறண்ட பூமிக்கு நல்ல மழையைப்போல, இது நல்ல சட்டமாக அமைகிறது. இந்த சட்டத்தைப் பற்றி யாரும் குறை கூற முடியாது. ஆங்காங்கு